என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

# நிதி - வணிகம் - முதலீடு

(தனிச் சுற்றுக்கு மட்டும்) மலர் - 1, இதழ் - 1, 1.4.2026 பக்கம்: 25 மின்னிதழ்

## அனைவருக்கும் வணக்கம்,

நிதி, வணிகம், முதலீடு ஆகியவைகளை கருத்தில் கொண்டு வெளிவரும் மின்னிதழ்கள் தமிழில் மிகவும் குறைவு. அந்த குறையை நிவர்த்தி செய்ய என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் குழுமம் முயற்சிகள் எடுத்து இந்த மின்னிதழை உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறது. தரமான வணிக மின்னிதழாக கொண்டு வர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு மாத இதழாக இந்த வணிக மின் இதழ் வெளிவரும்.

முதல் இதழ் உங்கள் கைகளில் தவழ்கிறது. தங்கள் அனைவரின் ஆதரவையும் தர வேண்டுகிறோம். தங்கள் நண்பர்களுக்கும் இந்த இதழை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தங்களின் மேலான கருத்துக்களை தெரிவிக்கவும்.

**அன்புடன்,**
ஆசிரியர்
நிதி - வணிகம் - முதலீடு

**NKC Finance Private Limited**
**www.nkcfinance.com**

# NKC Finance Private Limited
# Board



**Dr. E. Gnanam,**
Chairman



**Thiru. PL. Ramasamy,**
Managing Director



**Thiru. S.Chidambaram,**
Joint Managing Director



**Thiru. O. Somasundaram,**
Director



**Thiru. Sethuraman Sathappan,**
Advisor

# என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் சேர்மன்

## டாக்டர் இ.ஞானம் அவர்களுடன் பேட்டி




**அ. ஹுமாயூன்,**
**சிதம்பரம்**


**என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சேர்மன் டாக்டர் இ.ஞானம் அவர்கள் தமிழ்நாட்டில் முதன் முதலில் ரீடெய்ல் பார்மசி செயின் ஆரம்பித்தவர்கள். தற்போது மருந்து வணிகம், ஹாஸ்பிட்டல், மின் தூக்கி, நிதி ஆகிய துறைகளில் சிறப்புற பரிணமித்து வருகிறார்கள். இவர் முத்து குழுமத்தின் தலைவர் ஆவார்.**

நமது நிதி-வணிகம்-முதலீடு இதழுக்காக அவர்களை பேட்டி கண்டோம்.

**என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?**

முன் காலத்தில் மிகவும் புகழ்பெற்றதாக இருந்த 3 வங்கிகள் நகரத்தார்களால் உருவாக்கப்பட்டது. அதே பழைய நிலைக்குச் செல்ல வேண்டும். மீண்டும் வங்கி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ஊன்றிய விதைதான் என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகும்.

**எப்போது இந்த நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது?**

வங்கிப் பணிகளில் அனுபவம் பெற்ற திரு. சேதுராமன் சாத்தப்பன் விளக்கி வழிகாட்டிய கோவிலூர் என்.பி.சி. செமினாரில் தான் இந்த வங்கி சாரா நிதி நிறுவனத்திற்கு வித்திட்டோம். இந்த நிறுவனம் 2018



டாக்டர் இ.ஞானம், திருமதி.முத்து ஞானம்

இல் ரூபாய் 2.40 கோடி நிதியுடன் வணிக நடவடிக்கைகளை தொடங்கியது.

வங்கி சாரா நிதி வணிகத்தை நடத்துவது முக்கிய நோக்கமாகக் கொண்டு, 2018ல் அதற்கான உரிமம் மற்றும் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற்றோம். எங்கள் நிறுவனத்தை மறைந்த நீதியரசர் ஏஆர். லெட்சுமணன் அவர்கள் 2018 பிப்ரவரி 23ல் துவக்கி வைத்தார்.

**என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் போர்டில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்?**

இதுபோன்ற நிறுவனத்தில் நிதித் துறையில் அனுபவம் பெற்றவர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதால், நிர்வாக இயக்குனர் பழ. ராமசாமி, இணை நிர்வாக இயக்குனராக பலவான்குடியை சேர்ந்த சிதம்பரம், சண்முகநாதபுரத்தை சேர்ந்த சோமசுந்தரம் மற்றும் ஆலோசகராக சேதுராமன் சாத்தப்பன் ஆகியோர் இருக்கின்றனர்.

**என்ன வகையான கடன்கள் கொடுக்கப்படுகின்றன?**

வாடிக்கையாளர்களுக்கு அனைத்து வகை கடன்களும் செக்யூரிட்டிகளின் அடிப்படையை வைத்தே கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் எந்த ஒரு கடன் கொடுப்பதாக இருந்தாலும் அதை அனைத்து நிர்வாக

இயக்குனர்கள் உள்ள கமிட்டி ஒப்புதல்களுக்கு பிறகே கடன் வழங்குவது வழக்கம். இதனால் வாரா கடன் (NPA) போன்றவற்றால் நஷ்டம் வர வாய்ப்புகள் குறைவு.

## இயக்குநர்கள் குழு பற்றிக் கூறுங்களேன்?

இந்நிறுவனம் 4 இயக்குநர்களை கொண்ட குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. சேர்மன் பதவியை நான் வகிக்கிறேன். எனக்கு மருந்து சில்லறை, மொத்த வணிகத்திலும், ஹாஸ்பிட்டல், நிதி, மின் தூக்கி உற்பத்தி ஆகிய துறைகளில் அனுபவம் உண்டு. நிர்வாக இயக்குநர் பழ.ராமசாமி நிதித்துறையில் சிறந்த அனுபவமுள்ளவர். இணை நிர்வாக இயக்குநர் எஸ்.சிதம்பரம் நிறுவனத்தின் முழு நேர டைரக்டராக நிறுவனத்தின் செயல்பாடுகளை கவனித்துக்கொள்கிறார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 36 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட இவர், வங்கியில் நிர்வாகப் பதவிகள் உட்பட பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார். மற்ற இயக்குநர் திரு.ஓ.சோமசுந்தரமும் வாகன நிதித்துறையில் சிறந்த அனுபவத்தை கொண்டுள்ளார்.

## தங்கள் குடும்பம் குறித்து கூறவும்

1970 இல் முத்து பார்மசி மருந்து வியாபாரம் தொடங்கி 56 வருடமாக வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாடு மருந்து வணிகர் சங்கத்தில் செயலாளராக 8 ஆண்டு காலம் இருந்திருக்கிறேன். ஆல் இந்தியா அசோசியேஷனில் ஜாயிண்ட் செகரெட்டரியாக 2 வருடங்கள் இருந்திருக்கிறேன்.

மற்றும் நான் எங்கள் ஊரில் செய்த நல்ல காரியங்களுக்காக என்னை பாராட்டி மதுரை தமிழ் பல்கலைக்கழகம் எனக்கு டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்தது.

எனது மகன் கமர்ஷியல் பைலட்டாக (Commercial Pilot) 20 ஆண்டுகாலம் ஜெட் ஏர்வேஸில் பணிபுரிந்து, பின்னர் தற்போது எங்கள் வியாபாரத்தை பார்த்துக் கொள்கிறார்.

எனது மகள் திருமணம் ஆகி நீண்ட காலம் மலேசியாவில் இருந்து தற்போது எங்கள் வியாபாரத்தை 18 ஆண்டு காலமாக பார்த்துக் கொள்கிறார். மகனுக்கு இரண்டு பெண் குழந்தைகள். மகளுக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

மனைவி பற்றி பேசுகையில் நான் செய்யும் எந்த ஒரு நல்ல காரியங்களுக்கும் உடனடியாக "சரி" என சொல்வதோடு உடனிருந்து

உற்சாகப்படுத்துவார்.

**என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சிறப்புகளாக எதை கூறுவீர்கள்?**

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து ஈவுத்தொகையை (dividend) கொடுத்து வருகிறது. ஷேர் ஹோல்டர்களுக்கு போனஸ் பங்குகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் (2025) நிறுவனத்தின் மொத்த பிசினஸ் வளர்ச்சியை 125 கோடிக்கு மேல் (கடன்கள் மற்றும் டெபாசிட்) உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

வரும் மாதங்களில் பங்கு வெளியீடு கொண்டு வருவது பற்றியும் சிந்தித்து வருகிறோம் என்றார்.

வாழ்த்தி விடைபெற்றோம்.

**என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்**

**www.nkcfinance.com**

92800 85940

என்.கே.சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனம்)

We Listen You Prosper

NKC FINANCE PRIVATE LIMITED

நகை அடமானக் கடன்

தங்க நகைகள் தரம் பார்க்கும் வசதி

Gold, Silver Ornaments Testing Facility

Door No: 2/9B, பஜார் மெயின்ரோடு, INDANE GAS எதிரில்,
பொன்-புதுப்பட்டி - 622 407. பொன்னமராவதி.புதுக்கோட்டை மாவட்டம்.




# வங்கி வைப்புத்தொகை இன்சூரன்ஸ் தொகையை அதிகப்படுத்துவது எப்படி?




**சேதுராமன் சாத்தப்பன்**
Advisor,
NKC Finance Private Limited


**உங்களின் பிக்ஸட் டெபாசிட், ரெகரிங் டெபாசிட்கள், சேமிப்புக் கணக்குகள், கரண்ட் அக்கவுண்ட் போன்றவற்றுக்கான டெபாசிட் இன்சூரன்ஸ் எப்படி செயல்படுகிறது என்று பார்ப்போம்.**

## DICGC என்றால் என்ன?

DICGC என்பது Deposit Insurance and Credit Guarantee Corporation என்பதை குறிக்கிறது. இது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) துணை நிறுவனமாகும். வங்கி டெபாசிட்களுக்கு இன்சூரன்ஸ் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும்.

## DICGC உங்கள் வைப்புத்தொகையை எவ்வாறு பாதுகாக்கிறது?

- ➔ இது வங்கி டெபாசிட்தாரர்களுக்கு பாதுகாப்பு கவரேஜாக காப்பீட்டை வழங்குகிறது.
- ➔ ஒரு வங்கி கலைப்புக்கு சென்றால், DICGC ஒவ்வொரு டெபாசிட் தொகையாளருக்கும் உரிய நிலுவைத் தொகையை செலுத்தும் (விதிகளுக்கு உட்பட்டு)
- ➔ ஒவ்வொரு டெபாசிட்தாரரும், அசல் மற்றும் வட்டி இரண்டிற்கும் காப்பீடு செய்யப்படுகிறார்கள்.
- ➔ வெவ்வேறு வங்கிக் கிளைகளில் வைக்கப்பட்டுள்ள டெபாசிட்கள் காப்பீட்டுத் திட்டத்திற்காக ஒன்றாக இணைக்கப்பட்டு மொத்தமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## DICGC ஆல் காப்பீடு செய்யப்பட்ட அதிகபட்ச வைப்பு தொகை எவ்வளவு?

DICGC, ஏற்கனவே உள்ள அனைத்து கணக்குகளிலும் ஒரு வங்கிக்கு ஒரு வைப்புத்தொகையாளருக்கு ₹5 லட்சம் வரை காப்பீட்டுத் தொகையை வழங்குகிறது. இதில் அசல் மற்றும் வட்டி தொகைகளும் அடங்கும். இரண்டு சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இதைப் புரிந்து கொள்வோம்:

- ➔ சூழ்நிலை 1: வங்கி கலைக்கப்பட்டபோது திரு. A. அவர்களின் வங்கிக் கணக்கில் ₹2.5 லட்சம் இருந்தால், DICGC ₹2.5 லட்சம் மட்டுமே செலுத்தும்.
- ➔ சூழ்நிலை 2: திரு. B அவர்களின் வங்கிக் கணக்கில் ₹5 லட்சம் இருந்தால், திரட்டப்பட்ட வட்டி ₹4,500 என்றால், DICGC ₹5 லட்சம் மட்டுமே செலுத்தும்.

## DICGC வைப்புத்தொகை காப்பீட்டுத் தொகையை எவ்வாறு அதிகப்படுத்துவது?

குடும்பத்தில் உள்ள வெவ்வேறு நபர்களின் பெயரில், பல்வேறு வகைகளில் ஜாயிண்ட் அக்கவுண்ட் அல்லது மைனரின் பாதுகாவலராக – வெவ்வேறு வகைகளில் கீழ்கண்டவாறு கணக்குகளை திறப்பதன் மூலமாக அதிக

காப்பீடு பெறலாம்.

➔ சூழல் 1 (2 பெரியவர்கள் - A மற்றும் B). கணக்கு வைத்திருக்கும் முறை மற்றும் DICGC காப்பீடு.

இப்படி செய்வதன் மூலம் இரண்டு நபர்கள் ரூபாய் 20 லட்சம் வரை டெபாசிட் இன்சூரன்ஸ் கவர் பெறலாம்.

A ₹5 லட்சம்

B ₹5 லட்சம்

AB ₹5 லட்சம்

BA ₹5 லட்சம்

மொத்தம் ₹20 லட்சம்

➔ சூழல் 2 (3 பெரியவர்கள் - A, B மற்றும் C). கணக்கு வைத்திருக்கும் முறை மற்றும் DICGC காப்பீடு.

இப்படி செய்வதன் மூலம் மூன்று நபர்கள் ரூபாய் 75 லட்சம் வரை டெபாசிட் இன்சூரன்ஸ் கவர் பெறலாம்.

A ₹5 லட்சம்

B ₹5 லட்சம்

C ₹5 லட்சம்

AB ₹5 லட்சம்

AC ₹5 லட்சம்

BA ₹5 லட்சம்

BC ₹5 லட்சம்

CA ₹5 லட்சம்

CB ₹5 லட்சம்

ABC ₹5 லட்சம்

ACB ₹5 லட்சம்

BAC ₹5 லட்சம்

BCA ₹5 லட்சம்

CAB ₹5 லட்சம்

CBA ₹5 லட்சம்

மொத்தம் ₹75 லட்சம்

# என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

# N K C Finance Private Limited

## நம்பகமான, பாதுகாப்பான முதலீட்டுக்கு

எங்கள் கம்பெனியின் 10 சதவிகித வட்டியுடனான பாதுகாப்பான கடன் பத்திரங்கள்








| | |
|---|---|
| பத்திரத்தின் தன்மை | பாதுகாப்பான கடன் பத்திரங்கள் (secured Non convertible Debentures) |
| வட்டி விகிதம் | 10% p.a. (மூன்று மாதத்திற்கு ஒரு முறை) |
| குறைந்த பட்ச முதலீட்டு தொகை | ரூ.3,00,000/= |
| அதிக பட்ச முதலீட்டு தொகை | தலா ஒரு லட்சம் வீதம் ரூ.99 லட்சம் வரை |
| குறைந்த பட்ச முதலீட்டு காலம் | மூன்று வருடம் |
| அதிக பட்சம் முதிர்வு தேதி | 30-09-2029 மூன்று வருடம் கடந்ததும் பத்திரத்தை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு |
| முதலீட்டு காலத்திற்கு முன் திரும்பப்பெறும் வசதி | குறைந்த பட்சம் ஒரு வருடம் முடிந்திருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு பிறகு மூன்று வருடங்களுக்குள் மீட்டுக்கொள்ளும் சமயம் 0.5 வட்டி பிடித்தம் செய்யப்படும். |
| வருமான வரி | வருமான வரி சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 10 சதவிகிதம் வரி பிடித்தம் செய்யப்படும். வரிவிலக்கு வேண்டுபவர்கள் தகுந்த விண்ணப்ப படிவம் கொடுத்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம். |

**என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்**

(RBI Registration No. N-07-00846)

பதிவு அலுவலகம் 25,
எழும்பூர் நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை 600 008

Phone Numbers:
92800 85934 & 92800 85935
(Email: nkcfin18@gmail.com)
www.nkcfinance.com

(For Private Circulation only)



ELEVATE YOUR WORLD.
Reliable. Efficient. Connected.
We keep you safe:
Built with care.
Fast and smart:
Always ready for you.
Good for the planet:
Saves energy, too.
Here when you need us:
Help is just a call away.
Get Free Quote:
7299012340, 9042967057, 6381361322
MUTHU GROUP
SINCE 1970
MAGNETECH
ELEVATORS PVT.LTD.



# NRI-யிடமிருந்து சொத்து வாங்கும் போது - TDS

**V.RAMASAMY,** B.Com., F.C.A.
Chartered Accountant
COIMBATORE
ramsfca@gmail.com



## அறிமுகம்

இந்தியாவில் நிலம், வீடு போன்ற அசையா சொத்துகளை வாங்கும் போது, வாங்குபவர்கள் பலர் Tax Deducted at Source (TDS) விதிகளை கவனிக்காமல் விடுகின்றனர். குறிப்பாக விற்பவர் Non-Resident Indian (NRI) ஆக இருந்தால், TDS விதிகள் மிகவும் முக்கியமானவை.

இந்த விதிகளை சரியாகப் புரிந்துகொள்வது வரி சட்டங்களுக்கு இணங்க செயல்பட உதவுவதோடு, அபராதம், வட்டி மற்றும் சட்ட சிக்கல்களைத்

தவிர்க்கவும் உதவுகிறது.

Section 195 (புதிய வருமான வரி சட்டத்தில் தொடர்புடைய பிரிவு: Section 393(2))

ஒரு இந்திய குடியிருப்பாளர் (Resident Buyer), ஒரு NRI விற்பவரிடமிருந்து சொத்து வாங்கும்போது, TDS விதிகள் Income Tax Act Section 195-ன் கீழ் பொருந்தும்.

## TDS விகிதம்

NRI விற்பவருக்கு பணம் செலுத்தும் போது, வாங்குபவர் 12.5% TDS பிடித்தம் செய்ய வேண்டும்.

இதனுடன் பொருந்தும் Surcharge மற்றும் Health & Education Cess சேர்க்கப்படுவதால், மொத்த TDS விகிதம் அதிகரிக்கலாம்.

## TAN அவசியம்

தற்போதைய விதிகளின்படி, Section 195 கீழ் TDS பிடித்தம் செய்ய வாங்குபவர் Tax Deduction Account Number (TAN) பெற வேண்டும்.

Form 26QB பயன்படுத்த முடியாது

Form 27Q மூலம் TDS ரிட்டர்ன் தாக்கல் செய்ய வேண்டும்

(புதிய வருமான வரி சட்ட திருத்தங்களின்படி, இந்த வகை பரிவர்த்தனைகளுக்கு TAN அவசியம் இல்லாமல் மாற்றம் செய்யப்படலாம்.)

## மொத்த விற்பனைத் தொகையில் TDS

NRI விற்பவரிடமிருந்து சொத்து வாங்கும்போது மொத்த விற்பனைத் தொகை (Total Sale Consideration) மீது TDS பிடித்தம் செய்ய வேண்டும்.

இது Capital Gains மட்டும் அல்ல, முழு விற்பனை மதிப்பிலும் TDS பிடித்தம் செய்யப்படும்.

## தவணை அடிப்படையில் TDS

சொத்து விலை தவணைகளாக செலுத்தப்பட்டால், ஒவ்வொரு தவணை கட்டணத்திலும் TDS பிடித்தம் செய்ய வேண்டும்.

## NRO கணக்கில் பணம் செலுத்தல்

TDS பிடித்தம் செய்த பிறகு, மீதமுள்ள தொகையை NRI விற்பவரின் NRO (Non-Resident Ordinary) Account-க்கு செலுத்தலாம்.

## NRI விற்பவருக்கு TDS குறைக்கும் வழி

NRI விற்பவர்களுக்கு, மொத்த விற்பனைத் தொகையில் TDS பிடித்தம் செய்யப்படுவதால் அதிகமான தொகை தற்காலிகமாக பிடித்தம் செய்யப்படலாம்.

இதனைத் தவிர்க்க அவர்கள் Section 197 கீழ் Lower TDS Certificate பெற விண்ணப்பிக்கலாம்.

(புதிய சட்டத்தில் தொடர்புடைய பிரிவு: Section 395(1))

இதன் மூலம் Capital Gains மீது மட்டும் TDS பிடித்தம் செய்ய அனுமதி கிடைக்கும். விண்ணப்பத்திற்கு தேவையான ஆவணங்கள்

- ➔ Sale Agreement நகல்
- ➔ Cost of Acquisition ஆவணங்கள்
- ➔ Capital Gains கணக்கீடு
- ➔ Sections 54 / 54EC போன்ற வரிவிலக்கு முதலீட்டு ஆதாரம்

பொதுவாக இந்த செயல்முறை 4 முதல் 6 வாரங்கள் ஆகும். எனவே சொத்து விற்பனைக்கு முன்பே விண்ணப்பிப்பது நல்லது.

### விதிகளை பின்பற்றாததால் ஏற்படும் விளைவுகள்

### வட்டி (Interest)

- ➔ TDS பிடித்தம் செய்யாததால் மாதத்திற்கு 1%
- ➔ பிடித்தம் செய்தும் செலுத்தாததால் மாதத்திற்கு 1.5%

Late Filing Fee

- ➔ Form 27Q தாமதமாக தாக்கல் செய்தால் நாள் ஒன்றுக்கு ₹200

Section 271C கீழ் அபராதம்

- ➔ பிடித்தம் செய்யாத TDS தொகைக்கு சமமான அபராதம்

Income Tax Scrutiny

- ➔ வருமான வரித்துறை விசாரணை ஏற்படும் வாய்ப்பு

### வாங்குபவர்களுக்கு நடைமுறை ஆலோசனைகள்

1 விற்பவரின் Residential Status சரிபார்க்கவும்

Resident அல்லது NRI என்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. TAN பெறுதல் (தேவைப்பட்டால்)
Section 195-க்கு தற்போதைய விதிகளின்படி TAN அவசியம்.

3. முழு விற்பனைத் தொகையில் TDS பிடித்தம் செய்யவும்

4. Form 27Q தாக்கல் செய்து Form 16A வழங்கவும்

5. NRI விற்பவருக்கு Lower TDS Certificate பெற உதவும்

6.TDS சரியான நேரத்தில் செலுத்தவும்

**முடிவுரை**

NRI-யிடமிருந்து சொத்து வாங்கும் போது TDS விதிகள் Resident seller உடன் நடைபெறும் பரிவர்த்தனைகளை விட சற்று சிக்கலானவை. சரியான விதிகளைப் பின்பற்றினால் அபராதம் மற்றும் வரித்துறை சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

எனவே, இந்த வகை சொத்து பரிவர்த்தனைகளில் தகுதியான வரி ஆலோசகரின் வழிகாட்டுதல் பெறுவது மிகவும் முக்கியம்.

## நிதி - வணிகம் - முதலீடு

பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நிதி - வணிகம் - முதலீடு மின்னிதழ் "என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்" (NKC Finance Private Limited) நிறுவனத்தின் கீழ் வெளி வருகிறது. தமிழில் வர்த்தக கட்டுரைகள் எழுத ஆர்வம் உள்ளவர்கள் 250 - 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.




NKC FINANCE PRIVATE LIMITED
(RBI REGISTRATION No.N-07-00846)
Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Karaikudi : 94426 50312, Ponnamaravathi : 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website : www.nkcfinance.com
LOAN AGAINST PROPERTY
WE EXTEND THE FOLLOWING SERVICES:
Loan against Property for Personal needs at competitive rate of Interest. (Repayment upto 60 Months)
Loans (Short Term, Long Term and Line of Credit) against Property for Business requirements viz. for improving existing business/ commencing new business at competitive rate of Interest (Repayment 12 to 60 Months)
Loan against Jewellery at competitive rate of Interest
Processing charges and pre-closure charges are the lowest. No hidden charges.
Simple documentation, Quick decisions and Hassle-free procedures.
Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, Income/Revenue generation proof with 12 months Bank SB/Current Account statements.
Quantum:
Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs
HOW TO CHECK CIBIL SCORE?
Looking for a Loan?
Check your Free CIBIL Score first
*In principle sanction will be given within 3 working days and regular sanction will be given within 7 working days.
*T & C apply

# CIBIL Report

## An Overview


**S. Chidambaram,**
Joint Managing Director,
NKC Finance Private Limited




The CIBIL Report has become an important financial document for individuals and businesses seeking loans from banks and Non-Banking Financial Companies (NBFCs). Earlier, only financial institutions accessed these reports, but today individuals and companies also regularly review them to monitor their credit health. In some cases, a person's CIBIL report has even influenced major life decisions, highlighting its growing significance.

TransUnion CIBIL Limited, formerly known as Credit Information Bureau (India) Limited, is one of the leading credit information companies in India. Established on August 21, 2000, following the recommendations of the RBI Siddique Committee, it is headquartered in Mumbai. The company is majority-owned by TransUnion, a US-based multinational firm. Along with CIBIL, the



other credit information companies operating in India are CRIF Highmark, Experian, and Equifax. The Reserve Bank of India mandates all regulated entities such as banks and NBFCs to become members of these credit information companies and submit borrower credit data regularly.

CIBIL collects and maintains credit information on over 600 million individuals and 32 million businesses. Lenders submit borrower information twice a month, which includes personal details, contact information, employment data, loan accounts, repayment records, and credit enquiries. This information helps generate the CIBIL credit report and credit score, which reflects a borrower's creditworthiness and repayment behaviour.

A CIBIL score ranges from 300 to 900. Scores between 800 to 900 are considered excellent, while 750/800 is good and increases the chances of obtaining loans at favourable interest rates. Scores below 625 indicate poor repayment history, often due to missed EMI payments.

Important components of a CIBIL report include Amount Overdue, Days Past Due (DPD), Settlement Amount, Written-off Amount, and High Credit utilisation. High overdue payments, frequent credit enquiries, or loan settlements can negatively impact a borrower's credit profile.

To maintain or improve a CIBIL score, individuals should pay EMIs and credit card bills on time, avoid excessive borrowing, limit credit enquiries, maintain a low credit utilisation ratio (below 30%), and regularly monitor their credit reports. Any errors in the report can be disputed online, and corrections are usually processed within a stipulated period.

In conclusion, maintaining a healthy CIBIL score is essential for financial stability and easy access to loans and other financial products. Regular monitoring and responsible credit behaviour help build a strong credit profile and improve financial opportunities.

WITH BEST COMPLIMENTS FROM

**NKC FINANCE PRIVATE LIMITED**

(Non-Banking Finance Company registered with RBI)

Registered & Corporate Office

No:25/55, Egmore High Road, Chennai 600 008.

Contact No: 92800 85934, 92800 85935

www.nkcfinance.com

Email: nkcfin18@gmail.com

**Loan Against Property**

★ Simple Documentation & Quick Processing at Competitive Rate of Interest
Quantum: Rs.5 Lakhs-Rs.50 Lakhs

★ Gold Jewel & Silver Vessels

Branches : Ponnamaravathy, Karaikudi, Salem, Coimbatore




# சிக்கனம் + சேமிப்பு = மகிழ்ச்சி



**சேதுராமன் சாத்தப்பன்**
Advisor,
NKC Finance Private Limited

பொருட்செல்வம் இல்லாதவருக்கு இந்த உலகத்தில் வாழ்வில்லை என்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லிவிட்டார் திருவள்ளுவர். பொருளைச் சம்பாதித்தால் மட்டும் போதாது, அதைச் சரியாகப் பயன்படுத்தவும், சேமிக்கவும் தெரிந்திருந்தால்தான் இந்த உலகில் நாம் நினைப்பது போல வாழ முடியும்.

### நிதி அறிவு

நன்கு படித்து, கை நிறைய சம்பாதிக்கும் இளைஞர்களிடம் கூட நிதி நிர்வாகம் பற்றிய போதிய நாலெட்ஜ் இல்லாதிருப்பதைக் காண முடிகிறது. அவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்தாலும், பெங்களூரில் வாழ்ந்தாலும், ஒருவர் மட்டும் சம்பாதித்தாலும் இல்லை இருவரும் சம்பாதித்தாலும், நாளை என்பது இல்லை என்பது போல செலவழித்து கொண்டிருக்கிறார்கள். இது தான் நிதர்சனமான உண்மை. பணக்கார நாடான அமெரிக்காவில்

கூட மூன்றில் இரண்டு மக்கள் அடுத்த மாத சம்பளம் எப்போது வரும் என்ற வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்கர்களில் 43 சதவிகித மக்கள் பொருட்களை Buy Now Pay Later என்ற வழியில் தான் வாங்கி கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் பொருட்களை வாங்குபவர்கள் இந்தியர்களில் 22 சதவிகிதம் ஆவார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மக்களிடம் சேமிப்பு பழக்கம் குறைந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும்.

### நகரத்தார்களும், சேமிப்பும்

சேமிப்பு என்றால் தமிழகத்தில் நகரத்தார்கள் தான் கண் முன் வருவார்கள்.

மழை வருங்காலத்தில் பெரிய அண்டாக்களை வைத்து தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வதாகட்டும், தினசரி காலண்டர் தாளில் கிழிக்கும் பேப்பரை பல்பொடி மடிக்க உபயோகப்படுத்த அல்லது கணக்கு எழுத உபயோகிப்பதாகட்டும் அத்தனை சிக்கனம். தங்களுக்கு வரும் தபால் கவர்களை அழகாக கிழித்து திருப்பி ஒட்டி மறுபடி அதை ஒரு கவராக்கி கடிதம் அனுப்ப உபயோகிப்பார்கள். அந்தளவு சிக்கனம்.

அதிக அளவு நகை அடகு கடைகளை அப்போது வைத்திருந்த அவர்களால் இதனால் தான் 1976ல் இந்திரா காந்தி அம்மையாரால் போடப்பட்ட 20 அம்ச திட்டத்தின் ஒரு திட்டமான கடன் நிவாரண சட்டத்தின் நஷ்டத்தையும் தாங்க முடிந்தது.

அதற்கு முன்னர் பர்மாவில் தொழில் செய்து கொண்டிருந்த போது 1942ம் ஆண்டு வாக்கில் ஜப்பானின் ஊடுருவல் காரணமாக தங்களிடமிருந்த பொருட்களை அப்படி அப்படியே போட்டு விட்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் கால்நடையாகவே திரும்பி வந்தார்கள். அவர்களுடன் கட்டுக் கட்டாக பர்மிய கரன்சிகளை கொண்டு வந்தார்கள். அதாவது இந்தியாவில் அவற்றை மாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன். ஆனால் அவையெல்லாம் செல்லாது என்று ஜப்பானால் அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் துவண்டு விடவில்லை. அவர்களுக்கு உதவியது காலங்காலமாய் அவர்கள் செய்து வைத்திருந்த சேமிப்பு தான்.

அப்போது வெளிநாடுகளில் சம்பாதித்தாலும் அவற்றில் பெரும் பகுதியை இந்தியாவிற்கு கொண்டு வந்து சேமித்திருந்தார்கள். 1942ல் அவர்கள் இழந்தது 70 கோடி ரூபாய் மட்டுமே. இந்த 70 கோடி ரூபாயை தவிர சரியானபடி இந்தியாவில் கொண்டு வந்து சேமிக்காமல் அங்கேயே

தொழிலில் போட்டு தொழிலைப் பெருக்குவோம் என்று இருந்திருந்தால் இன்றய தினம் அதன் மதிப்பு பல லட்சம் கோடிகளைத் தாண்டி அந்த இழப்பு இருந்திருக்கும்.

### ஓட்ட பந்தயம்

பணம் சம்பாதிப்பது என்பது வாழ்க்கையில் நாம் பங்கேற்கும் முக்கிய ஓட்டப்பந்தயம் ஆக இருக்கின்றது. வாழ்க்கையில் அதிகபட்சமாக முதல் 21 வருடங்கள் அதற்காக நம்மை தயார்படுத்திக் கொள்கின்றோம். அதாவது சரியானபடி படித்து... மீதம் இருக்கும் 40 வருடங்கள் இந்த பந்தய வாழ்க்கையை வாழ்கின்றோம். இந்த ஓட்டப்பந்தய வாழ்க்கையில் எல்லோருக்கும் சம்பாதிக்கும் எல்லைக்கோடு ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவரவர் சம்பாதிக்கும் திறமைக்கு ஏற்ப எல்லைக்கோடுகள் இருக்கின்றது.

இந்த உலகில் பணம் தந்து வாங்க கூடியவை சில. பணம் தந்து வாங்க முடியாதவை சில. மனித வாழ்வுக்கு இந்த இரண்டும் ஒரே சீரான அளவில் கலவையாக இருந்தால் தான் நல்லது. அதாவது நம் உணவில் உப்பை போன்றது.

### நிலையற்ற நிலையைச் சமாளிக்க நிதி

நமது வாழ்க்கை என்பது நிலையற்றதாகும். எப்போது வேண்டுமானாலும் நிதிச் சிக்கல் வரும். இதை யாராலும் முன்கூட்டியே கணிக்க முடியாது. கோவிட் 19 போன்ற பெருந்தொற்றால் உலகமே பொருளாதார மற்றும் நிதிச் சிக்கலில் மாட்டிக் கொண்டது. சிலருக்கு தொழில் பாதிப்பு ஏற்பட்டது; சம்பளதாரர்களில் பலருக்கு சம்பளம் குறைந்துபோனது, பலருக்கு வேலைகூட பறி போனது.

பக்கத்து வீட்டுக்காரர்களிடம், நம்மோடு வேலை செய்வோர்களிடம் இருக்கும் அனைத்துப் பொருட்களும் நம்மிடமும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நமக்கு என்ன தேவையோ, அதற்குச் செலவிட வேண்டும். வாரன் பஃபெட் சொன்னதுபோல, தேவையற்றவையை அநாவசியமாக வாங்கினால், நெருக்கடி நேரத்தில் தேவையானவைகளை விற்க நேரிடும்.

பணி ஓய்வுக்குப் பின்னான 20, 30 வருடங்களுக்கு உங்கள் வருமானத்துக்கான ‘செக்’கை நீங்கள்தான் எழுதிக்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தால், ஓய்வுக்காலத்துக்கான முதலீட்டை நீங்கள் செய்யத் தொடங்கிவிடுவீர்கள்!


Senthoor
RESIDENCY
வீடுகள், அறைகள்
நாள் மற்றும் மாத
வாடகைக்கு விடப்படும்
17/2, Nethaji Road, Behind Mathoor Valagam, Near New Bus Stand,
KARAIKUDI - 630 003
Cell : 9994858735

# OUR SERVICE :

- 24 Hours Emergency & Trauma Care
- 24 Hours Ambulance Service
- 24 Hours Laboratory
- Air Conditioned Private Rooms
- Air Conditioned General Ward
- Fully equipped ICU
- Maternity Care
- Major Operation Theatres
- X-Ray & Ultrasound
- Multi speciality Consultation
- Physiotheraphy & Rehabilitation
- Dental and Maxillofacial Surgery

# WHY CHOOSE US

With 50+ years of trusted healthcare, we're a fully air-conditioned multispeciality hospital offering expert doctors, advanced facilities, and compassionate care—all under one roof.



MUTHU GROUP SINCE 1970

## MUTHU HOSPITAL
**Perambur**

**CONTACT US :**

+91 7397 310 543
044 7962 0543

336, Paper Mills Road, Perambur

muthuhospitalperambur.com